வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.903/ஆ4/2022 நாள் 24.06.2022

----

பொருள்: பள்ளிக் கல்வி – அரசு / நகராட்சி / ஆதிதிநல / நிதி உதவி / உயர் / மேல்நிலைப் பள்ளி இணைப்பில் காணும் தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெறுதல் - தேர்ச்சி விழுக்காட்டு விவரங்களுடன் தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்கள் தவறாமல் கலந்துக் கொள்ள தெரிவித்தல் சார்பாக.

பார்வை: வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேரடி செய்தி 22.06.2022

----

வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு / நகராட்சி / ஆதிதிநல / நிதி உதவி / உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கான ஆய்வுக் கூட்டம் கீழ்காணும் நாளன்று நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் தவறாமல் தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் மட்டும் கூட்டப்பொருளில் கோரப்பட்டுள்ள விவரங்களுடன் மிகச் சரியான நேரத்தில் (3.30 மணிக்குள்) கலந்துக் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| | | |
|---|---|---|
| கூட்டம் நடைபெறும் இடம் | : | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 5வது தளம், வேலூர். |
| நாள் | : | 27.06.2022 - திங்கட்கிழமை |
| நேரம் | : | மாலை 4.00 மணி முதல் |

<u>கூட்டப்பொருள் (இரண்டு நகல்களில் சமர்ப்பிக்கவேண்டும்)</u>

1. தங்கள் பள்ளியின் தேர்ச்சி விழுக்காடு
2. ஆசிரியர்கள் பாடவாரியான தேர்ச்சி விழுக்காடு
3. ஒன்று மற்றும் இரண்டு பாடங்களில் தோல்வியுற்ற மாணாக்கர்களின் எண்ணிக்கை (பாடவாரியாக) மற்றும் சார்ந்த ஆசிரியர்களின் விவரம்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
இணைப்பில் காணும் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்
மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்
மாவட்டக் கல்வி அலுவலர்,
வேலூர் – தொடர் நடவடிக்கைக்காக